Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JUNE 29, 2023

வியாழக்கிழமை, ஜூன் 29, 2023 | ஒளி: 09 கதிர்: 029 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE







### பொருளாதார நெருக்கடியில் இருந்து

# விரைவான திருப்பத்தை இலங்கை ஏற்படுத்தும்

உலக பொருளாதார மன்றத்தின் தலைவர் பொர்கே பிரெண்டே, கடந்த ஆண்டு ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை விரைவான திருப்பத்தை ஏற்படுத்தும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சீனாவின் தியான்ஜினில் உலக பொருளாதார மன்ற தலைவருக்கும் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி ஆகியோருக்கு இடையே நடந்த கலந்துரையாடலின் போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இந்த சந்திப்பின் போது இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இலங்கையின் பொருளாதார நிலை மற்றும் மீட்சி நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடியதாக அமைச்சர் சப்ரி தெரிவித்தார்.

வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி தற்போது தியான்ஜினில் நடைபெறும் உலகப் பொருளாதார மாநாட்டில் பங்கேற்கும் குழுவுக்கு தலைமை தாங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

PUCSL

## மின்கட்டண குறைப்பு வெள்ளி இறுதி தீர்மானம்

மின்சார கட்டணத்தை குறைப்பதற்கு இலங்கை மின்சார சபை சமர்ப்பித்துள்ள பிரேரணை மீதான இறுதித் தீர்மானம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (30) எட்டப்படவுள்ளது.

ஜூலை 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் இறுதி கட்டணத்தை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிக்க உள்ளது.

தொடர்ச்சி P2

### இலங்கைக் கவிஞர் தீபச்செல்வனுக்கு

## அமெரிக்க விசா மறுப்பு



அமெரிக்காவில் நடைபெறும் இலக்கிய மாநாட்டுக்குச் செல்வதற்காக விண்ணப்பித்திருந்த இலங்கைக் கவிஞர் தீபச்செல்வனுக்கு விசா மறுக்கப்பட்டுள்ளது. இரண்டு முறை விண்ணப்பித்திருந்தும் அமெரிக்கத் தூதரகம் தனக்கு விசா வழங்க மறுத்துவிட்டதாகக் கூறியிருக்கும் தீபச்செல்வன், எதிர்காலத்தில் இந்தியாவுக்குச் செல்லவும் தனக்கு விசா மறுக்கப்படலாம் என கவலை தெரிவித்திருக்கிறார்.

தொடர்ச்சி P2

## சனிக்கிழமை சபை கூடும்



ஜூலை மாதம் 01 ஆம் திகதி மு.ப. 09.30 மணிக்குப் பாராளுமன்றம் கூடும் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவினால் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## மாடு வாங்க ஓமந்தை வந்து ஏமாந்த நபர்

### மல்லாவி நபரிடம் கைவரிசை

■ க. அகரன்

மாடு வாங்குவதற்காக ஆர்வம் கொண்டிருந்த மல்லாவியை சேர்ந்த நபரிடம் வவுனியா ஓமந்தையில் மாடுகள் விற்பனைக்கு உள்ளதாக தெரிவித்து பணத்தை சுருட்டிக்கொண்டு சிலர் தலைமறைவாகியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## 24 மணிநேரத்தில் 7 சிறுமிகள் துஷ்பிரயோகம்

கடந்த 24 மணித்தியாலங்களில் 7 சிறுமிகள் பாலியல் துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 4 பேர் 17-18 வயதுடைய சிறார்கள் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### அரச வீடமைப்பு திட்டங்களில்

## 869 வீடுகள் ஆபத்தான நிலையில் உள்ளன



அரச வீடமைப்பு திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட சுமார் 869 வீடுகளும் 619 கடைகளும் பாதுகாப்பற்ற ஆபத்தான நிலையில் உள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## லங்கா சதொச நிறுவனத்தை இலாபகரமாக்குவது அவசியம்

### கோப் குழுவில் வலியுறுத்தல்

லங்கா சதொச நிறுவனத்தின் 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்த விடயங்கள் ஆராயப்பட்டதுடன் பொருத்தமான வியாபார மாதிரி ஒன்றை தயாரித்து நிறுவனத்தை இலாபகரமானதாக மாற்ற வேண்டியதன் அவசியம் கோப் குழுவில் வலியுறுத்தப்பட்டது

தொடர்ச்சி P2

### உள்ளூராட்சி மன்ற விவகாரம்

## அமைச்சருக்கு அதிகாரமளிக்கும் வர்த்தமானி வெளியானது

கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களை மீண்டும் கூட்டுவதற்கு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரமளிக்கும் வகையில் 3 திருத்தச் சட்டமூலங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

### எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம்


## வணிக நீதிமன்றுக்கு வழக்கை மாற்ற இணக்கம்

எக்ஸ்பிரஸ் பேர்ள் நஷ்டஈட்டு வழக்கை சிங்கப்பூர் சர்வதேச வணிக நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கு காப்புறுதி நிறுவனம் இணங்கியுள்ளதாகவும் அந்நாட்டு அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.



தொடர்ச்சி P2

## ரயில் தண்டவாள இரும்புகளை விரும்பும் போதை ஆசாமிகள்



போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் போதைப்பொருள் வாங்குவதற்காக ரயில் தண்டவாளங்களில் உள்ள ஆணிகள், இரும்புத் துண்டுகள் ஆகியவற்றை அகற்றுவதால் பெரும்பாலான ரயில்கள் தடம் புரள்கின்றன.

தொடர்ச்சி P2

### அமீரக நிறுவனத்துக்கு

## ஹோட்டல் அமைப்பதற்கு காணி வழங்க தீர்மானம்

ஐக்கிய அரபு அமீரகத்தின் கெப்பிட்டல் இன்வெஸ்ட்மென்ட் எல்எல்சி நிறுவனத்துக்கு சொகுசு ஹோட்டல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் காணி வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கிகாரம் கிடைத்துள்ளது.

தொடர்ச்சி P2

### மக்களை வீதிகளுக்கு இறக்கி

## போராட்டம் நடத்தாமல் மேன்முறையீடு செய்யலாம்

### மக்களை ஊக்குவிக்குமாறு ஜீவன் கோரினை



அஸ்வெசும சமூக நலன்புரி கொடுப்பனவை பெறுவதற்கு தகுதி இருந்தும் உத்தேச பெயர் பட்டியலில் பெயர் இடம்பெற்றிருக்காவிட்டால் மக்களை வீதிகளுக்கு இறக்கி போராட்டங்களை நடத்துவதைவிட, அவர்களை மேன்முறையீடு செய்வதற்கு ஊக்குவிக்குமாறு அரசியல் பிரமுகர்களிடம் கேட்டுக்கொள்வதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## 13ஐ நடைமுறைப்படுத்துவதே தமிழர் பிரச்சனைக்கு தீர்வு

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை மீள நடைமுறைப்படுத்துவதே இலங்கை தமிழர்களுக்கு சம உரிமை வழங்கும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அமையும் என்று பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநில தலைவர் குப்புசாமி அண்ணாமலை தெரிவித்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இங்கிலாந்து பாராளுமன்றத்திலுள்ள ஹவுஸ் ஓஃப் லோட்ஸ் அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# மின்கட்டண குறைப்பு இன்று இறுதி தீர்மானம்

உத்தேச கட்டண திருத்தங்கள் தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக ஆணைக்குழு விசேட அமர்வொன்றை செவ்வாய்க்கிழமை (27) நடத்தியது.

இதன்படி, பொது மக்கள் கருத்துக்கள் மற்றும் மின்சாரசபை முன்வைக்கும் சூத்திரங்களை கருத்தில் கொண்டு, ஆணைக்குழு தனது தீர்மானத்தை அறிவிக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜூலை முதலாம் திகதி முதல் மின்சாரக் கட்டணத்தை ஒட்டுமொத்தமாக 3.15 வீதத்தால் குறைக்க இலங்கை மின்சார சபை முன்மொழிந்துள்ளது.

வீடுகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களில் 30 அலகுகள் வரையிலான மின் கட்டணத்தை 23 வீதமாகவும் உணவகங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான மின் கட்டணத்தை 29 முதல் 40 வீதமாகவும் குறைப்பதற்கு இலங்கை மின்சார சபை திட்டமிட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஜூலை முதல் டிசெம்பர் காலப்பகுதியில் அரச துறைகளுக்கான மின் கட்டணங்களில் எந்த மாற்றமும் செய்யப்படாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# சனிக்கிழமை சபை கூடும்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் அறிவுறுத்தலுக்கமைய செவ்வாய்க்கிழமை (27) இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் கோரிக்கைக்கு அமைய, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 16 இன் பிரகாரம் எதிர்வரும் ஜூலை 01 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 09.30 மணிக்கு மணிக்குப் பாராளுமன்றம் கூடும் என சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன அதிவிசேட வர்த்தமானி மூலம் செவ்வாய்க்கிழமை (27) அறிவித்திருந்தார்.

# 24 மணிநேரத்தில் 7 சிறுமிகள் துஷ்பிரயோகம்

பதிவாகியுள்ள ஏழு சம்பவங்களில் நான்கு சம்பவங்கள் கட்டாயப்படுத்தப்பட்டவை எனவும் மேலும் மூன்று சம்பவங்கள் காதல் உறவுகளால் ஏற்பட்டவை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமிகள் 14, 15, 16 மற்றும் 17 வயதுடையவர்கள் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பூஜாபிட்டிய, மருதானை, கொட்டவெஹெர, தும்மலசூரிய, பதவிய, மிட்டியகொட, யடவத்த ஆகிய இடங்களில் இருந்தும் இது தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# போராட்டம் நடத்தாமல் மேன்முறையீடு செய்யலாம்

தகுதி இருந்தும் உத்தேச பெயர் பட்டியலில் பெயர் இடம்பெற்றிருக்காவிட்டால் அது தொடர்பில் எதிர்வரும் ஜூலை 10 ஆம் திகதிக்குள் மேன்முறையீடு செய்யுமாறு , மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பிலுள்ள அமைச்சில் புதன்கிழமை (28) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்,

" அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான பெயர் பட்டியலை தயாரிக்கும்போது பெருந்தோட்ட மக்கள் புறக்கணிக்கப்படக்கூடாது என்ற கோரிக்கை எம்மால் முன்வைக்கப்பட்டது. உலக வங்கி மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க ஆகியோருடனும் இது தொடர்பில் பேச்சு நடத்தி, தீர்வொன்றை பெற்றிருந்தோம். ஏனெனில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஈ.பி.எப், ஈ.டி.எப் பிடிபடுவதால் சமுர்த்தி கொடுப்பனவின் போது கடந்த காலங்களில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டனர். இம்முறை அந்த குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டது.

அஸ்வெசும திட்டத்தில் புறக்கணிப்பு இடம்பெற்றுள்ளது எனக் கூறி தலவாக்கலையில் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் அரசியல் சூழ்ச்சி உள்ளது என்றார்.

# அமெரிக்க விசா மறுப்பு

நாவலாசிரியர், கவிஞர், சிறுகதை எழுத்தாளர், திரைப்படப் பாடலாசிரியர், வசனகர்த்தா எனப் பல தளங்களில் இயங்கிவருபவர் கவிஞர் தீபச்செல்வன். அவர் எழுதிய 'பதுங்கு குழியில் பிறந்த குழந்தை', 'நான் ஸ்ரீலங்கன் இல்லை' ஆகிய கவிதைத் தொகுப்புகளும், 'நடுகல்' என்ற நாவலும் தமிழ் வாசகப் பரப்பில் மிகுந்த கவனம் பெற்றவை. சமீபத்தில் அவர் எழுதிய 'பயங்கரவாதி' நாவல் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

இந்நிலையில், அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள வட அமெரிக்க தமிழ் சங்கத்தின் (FeTNA) 36-வது தமிழ் விழா ஜூன் 30-ம் தேதி தொடங்குகிறது. இந்த நிகழ்வில் பங்குபெறுமாறு தீபச்செல்வனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதற்காக இலங்கைத் தலைநகர் கொழும்புவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் விசாவுக்காக அவர் விண்ணப்பித்திருந்தார். ஆனால், அவர் நாடு திரும்புவார் என்ற நம்பிக்கை அல்லது முகாந்திரம் இல்லை, அமெரிக்காவில் குடியேறிவிடுவார் என்று கூறி அமெரிக்கத் தூதரகம் அவருக்கு விசா வழங்க மறுத்துவிட்டது. இரண்டாவது தடவையாக விசா கோரி விண்ணப்பித்தபோதும், அதே காரணம் கூறப்பட்டு விசா மறுக்கப்பட்டது.

இது குறித்து 'இந்து தமிழ் திசை' டிஜிட்டலிடம் பேசிய தீபச்செல்வன், "இலங்கையில் தொடர்ந்து வாழ வேண்டும்; ஆசிரியர் பணி செய்ய வேண்டும்; தொடர்ந்து இலங்கையில் இருந்து எழுத வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம் என்று கூறியபோதும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அதைப் பொருட்படுத்தவில்லை.

ஒடுக்கப்பட்ட இலங்கை மக்களின் குரலாய் இந்த மண்ணில் வாழ்ந்து உரிமைகளைப் பெறுவதே என் எண்ணம். அதற்கு ஜனநாயக தளத்தில் தம் பண்பாடுகள், அடையாளங்கள் சார்ந்த குரலை முன்வைக்கவே மாநாட்டுக்குச் செல்ல வேண்டும் என்று விரும்பினேன். ஆனால், பொருத்தமில்லாத காரணத்தைச் சொல்லி எனக்கு விசா வழங்க மறுத்துவிட்டார்கள். அமெரிக்கத் தூதரகமே மறுத்துவிட்டதால், இனி இந்தியாவுக்கு வரவும் எனக்கு விசா வழங்கப்படுவது சந்தேகம்தான்" என்று கூறினார். (நன்றி 'இந்து தமிழ் திசை')

# மந்தை வாங்க ஓமந்தை வந்து ஏமாந்த நபர்

மல்லாவியை சேர்ந்த ஒருவருடன் அண்மையில் வவுனியாவை சேர்ந்த ஒருவருடன் அறிமுகமாகியுள்ள நிலையில், மாடுகள் வேறு இருந்தால் கூறுங்கள் என்று மல்லாவியை சேர்ந்தவர் அவரிடம் கூறியுள்ளார்.

அண்மையில் தொடர்புகொண்ட குறித்த நபர் ஓமந்தையில் மாடுகள் விற்பனைக்கிருப்பதாகவும் உடனடியாக வந்தால் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எனினும் மல்லாவியை சேர்ந்தவர் தற்போது பணம் இல்லை ஒரு சில நாட்களின் பின்னர் வாங்குவதாக தெரிவித்துள்ளார்.

எனினும் தனது அண்ணாவுக்கு பணம் அவசரம் தேவைப்படுவதால் உடனடியாக விற்கவேண்டியுள்ளது பணத்துடன் வாருங்கள் என கூறியுள்ளர்.

இந்நிலையில் நகைகளை அடகு வைத்து மல்லாவியில் இருந்து ஓமந்தைக்கு வருகை தந்தவரிடம் ஓமந்தை வைத்தியசாலை பகுதியில் வைத்து பத்து இலட்சம் ரூபாய் பணத்தை பெற்ற நபர் சற்று தூரம் அழைத்து சென்று மாடுகள் சிலவற்றை காட்டியுள்ளார்.

குறித்த மாடுகளுடன் வேறு இருவரும் நின்ற நிலையில் மாடுகளை பொலிஸாருக்கு தெரியாது வேறு பாதையால் கொண்டு வந்து தருவதாக தெரிவித்ததுடன் பணத்தை பெற்றமைக்காக கடிதம் எழுத வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதன்போது ஓமந்தையில் உள்ள கடையொன்றில் பணத்தை பெற்றவர் காகிதாதி ஒன்றை வாங்க சென்ற சமயம் மாடுவாங்க வந்தவரும் சென்றுள்ளார். இதன்போது மாடு கொண்டு செல்லும்போது வீதியை விட்டு வேறு இடத்துக்கு சென்றுவிட்டதாக கூறி மாடு வாங்க வந்தவரை அவ்விடத்துக்கு செல்லுமாறு கூற அவரும் சென்றுள்ளார்.

அங்கு சென்ற மல்லாவியை சேர்ந்த மாடு வாங்க வந்தவர் மாட்டையும் காணாமல் கொண்டு சென்றவர்களையும் காணவில்லை என்பதால் கடிதம் எழுதுவதற்காக காகிதாதி வாங்க சென்றவரிடம் மீண்டும் சென்றுள்ளார் எனினும் அவரும் அங்கு இல்லாத நிலையில் பணத்தை இழந்து செய்வதறியாது நின்றுள்ளார்.

இந் நிலையில் ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு சென்றபோது பத்து இலட்சத்துக்கு மேல் என்பதால் வவுனியாவில் குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவர்கள் தாம் முறைப்பாட்டை எடுக்க முடியாது மீண்டும் ஓமந்தையில் முறைப்பாட்டை பதிவு செய்யுங்கள் என திருப்பி அனுப்பிய நிலையில் பணத்தையும் இழந்து முறைப்பாடும் செய்ய முடியாத நிலையில் மல்லாவியில் இருந்து மாடு வாங்க வந்தவர்கள் செய்வதறியாதுள்ளனர்.

# வணிக நீதிமன்றுக்கு வழக்கை மாற்ற இணக்கம்

கப்பல் விபத்தினால் நாட்டின் கடற்பரப்புக்கு ஏற்பட்ட சேதத்துக்கான நஷ்டஈட்டை செலுத்துமாறு கோரி, சிங்கப்பூர் நீதிமன்றத்தில் ஏற்கெனவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், வழக்கை சிங்கப்பூர் சர்வதேச வணிக நீதிமன்றத்துக்கு மாற்றுவது குறித்தே மேற்குறிப்பிட்ட இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு சிங்கப்பூரில் எதிர்வரும் 06 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் நஷ்டஈட்டு வழக்கு தொடர்பான இணக்கப்பாடு குறித்து கலந்துரையாடுவதற்காக இலங்கை பிரதிநிதிகள் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு பின்னர் சிங்கப்பூருக்கு பயணிக்கவுள்ளதாகவும் சட்ட மா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச வணிக நீதிமன்றத்துக்கு வழக்கை மாற்றுவதன் மூலம் நாட்டின் கடற்பரப்பிற்கு ஏற்பட்ட சேதத்திற்கு உரிய நஷ்டஈட்டை எவ்வித இடையூறும் இன்றி பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# ரயில் பாதை இரும்புகளை விரும்பும் போதை ஆசாமிகள்

இவ்வாறானவர்கள் தொடர்பில் அறியக் கிடைத்தால் பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்க வேண்டும் என்று ரயில்வே திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் வி.எஸ்.பொல்வத்தகே தெரிவித்தார்.

புகையிரத திணைக்களத்தில் புதன்கிழமை (28) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து செவ்வாய் (27) மாலை 4 மணியளவில் கொஸ்கம நோக்கி பயணித்த பயணிகள் ரயில், பேஸ்லைன் ரோட் ரயில் நிலையத்துக்கும் கோட்டே ரோட் ரயில் நிலையத்துக்கும் இடையிலான பகுதியில் தடம் புரண்டது.

ரயில் என்ஜின் உட்பட மூன்று பெட்டிகள் இவ்வாறு தடம் புரண்டன. இதனால் களனிவெளி பாதையின் ரயில் சேவைகள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டு, மீண்டும் புதன்கிழமை (28) வழமைக்கு திரும்பின.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் தண்டவாளங்களில் பொருத்தப்பட்டுள்ள ஆணிகள், இரும்புத் துண்டுகள் ஆகியவற்றை அகற்றுகிறார்கள். இவ்வாறான சம்பவம்தான் பேஸ்லைன் ரோட் - கோட்டே ரயில் நிலையத்தை அண்மித்த பாதையில் இடம்பெற்றுள்ளதாகவும் இதனால் தடம் புரண்டதாகவும் குறிப்பிட்டார்.

போதைப்பொருள் பாவனையாளர்கள் தாம் செய்வது எவ்வளவு பெரிய பாரதூரமான செயல் என்பதை அறிவார்களா என்பது தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

# 869 வீடுகள் ஆபத்தான நிலையில் உள்ளன

40 ஆண்டுகளுக்கும் மேலான அனைத்து அடுக்குமாடி குடியிருப்புகளிலும் வசிப்பவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான விசேட வேலைத்திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இதன்படி, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் இருந்து அடுக்குமாடி குடியிருப்புகளின் தரம் தொடர்பான தொழில்நுட்ப அறிக்கையை பெற்றுக் கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனமோ அல்லது வேறு அரச நிறுவனமோ இதுபோன்ற கட்டடங்கள் குறித்து ஆய்வு நடத்தி முறையான தொழில்நுட்ப அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு என எதிர்பார்க்கப்படுகிறது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டப்ளியூ.எஸ்.சத்யானந்தா தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்ப அறிக்கையின் பரிந்துரைகளின்படி வீடமைப்புத் தொகுதிகள் மீள்அபிவிருத்தி அல்லது மேம்படுத்தல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாதுகாப்பற்றதாக இனங்காணப்பட்ட 8 வீட்டுத் தொகுதிகள் தொடர்பில் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையானது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

வேகந்த வீடமைப்புத் திட்டம், பம்பலப்பிட்டி வீடமைப்புத் திட்டம், வேல்ஸ் குமார மாவத்தை வீடமைப்புத் திட்டம், சிறிதம்ம மாவத்தை வீடமைப்புத் திட்டம், கம்கருபுர வீடமைப்புத் திட்டம், மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டங்கள், மிகிந்து மாவத்தை வீடமைப்புத் திட்டம் ஆகியவற்றில் சுமார் 869 வீடுகளும் 619 கடைகளும் பாதுகாப்பற்ற ஆபத்தான நிலையில். உள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான்கு கட்டிடங்களைக் கொண்ட வேகந்த வீடமைப்புத் திட்டம் 1981 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் கட்டப்பட்டது. இது 114 வீடுகளைக் கொண்டுள்ளது. தற்போதுள்ள அபாய நிலையைக் கருத்தில் கொண்டு அந்த வீடுகளில் வசிப்பவர்களுக்கு ஹேனமுல்ல அடுக்குமாடி குடியிருப்பில் வீடுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அதற்கு இணங்காத சுமார் 65 குடும்பங்கள் இன்னமும் அந்த வீட்டுத் தொகுதியிலேயே வாழ்ந்து வருகின்றனர். அந்த 65 குடும்பங்களை உடனடியாக வெளியேற்றும் வகையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# லங்கா சதொச நிறுவனத்தை இலாபகரமாக்குவது அவசியம்

பாராளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார தலைமையில் கடந்த 22ஆம் திகதி கூடிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் (கோப் குழு) லங்கா சதொச லிமிடட் நிறுவனம் அழைக்கப்பட்டதாக புதன்கிழமை (28) அறிவிக்கப்பட்டுள்ளது.

2021-24 காலப் பகுதிக்கு உறுதியான திட்டம் இருந்தபோதும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இதனால், 2028ம் ஆண்டு வரை விரிவான திட்டத்தை தயாரித்து, அதன் செயல்பாடுகள் குறித்து 2 மாதங்களுக்குள் அறிக்கை அளிக்கும்படி குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்தார். ஒரே நேரத்தில் செயற்திட்டத்தை தயாரிக்கவும் அவர் அறிவுறுத்தினார்.

உள்ளகக் கணக்காய்வுப் பணியாளர்களாக 21 பேர் இருந்தபோதிலும் 2021ஆம் ஆண்டுக்கான மூன்று கணக்காய்வு விசாரணைகள் மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், 2022ஆம் ஆண்டுக்காக எவ்வித கணக்காய்வு விசாரணைகளும் முன்வைக்கப்படவில்லையென்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான தகவல்களைப் பெறுவதில் உள்ள சிரமம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. இதன்படி, உள்ளக சுற்றறிக்கை ஊடாக உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு அறிவிக்கப்பட வேண்டும் என கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

2014-2015 காலத்தில் லங்கா சதொச நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அரிசி இறக்குமதி காரணமாக 6 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் அமைய எதிர்காலத்தில் கலந்துரையாடல் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

லங்கா சதொச நிறுவனத்தில் 2022ஆம் ஆண்டின் நஷ்டம் ஏறத்தாழ 600 மில்லியன் ரூபா என்றும் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார். அத்துடன் 2021 டிசம்பர் 31ஆம் திகதியில் மொத்த நஷ்டம் 15 பில்லியன் ரூபாவுக்கு அண்மித்த பெறுமதி என்றும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

# அமைச்சருக்கு அதிகாரமளிக்கும் வர்த்தமானி வெளியானது

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம், மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 252) மற்றும் நகர சபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 255) ஆகியவற்றில் திருத்தம் செய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொடவின் தனிநபர் யோசனையாக இந்த 3 திருத்தச் சட்டமூலங்களும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

பிரதேச சபைகள் திருத்தச் சட்டம், நகர சபைகள் கட்டளை திருத்தச் சட்டம், மாநகர சபைகள் திருத்தச் சட்டம் ஆகிய சட்டங்களின் சரத்துகள் சில இந்த சட்டமூலத்தின் மூலம் திருத்தப்படவுள்ளன.

12 மாதங்கள் கடந்தாலும், அமைச்சரின் விருப்பத்தின் பேரில் முடிவெடுக்கப்பட்ட ஒரு காலத்துக்கு உள்ளூராட்சி மன்றத்தை மீண்டும்

# ஹோட்டல் அமைப்பதற்கு காணி வழங்க தீர்மானம்

தற்போது இலங்கை மின்சார சபையின் கட்டுப்பாட்டில் உள்ள மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கத்தை அண்டிய ஒரு காணி மற்றும் நீர்த்தேக்கத்தில் அமைந்துள்ள சிறிய தீவு ஆகியவை 25 மில்லியன் அமெரிக்க டொலர்களை முழு வெளிநாட்டு முதலீடு செய்து ஹோட்டல் வளாகத்தை நிர்மாணித்து பராமரிக்கும் திட்டத்துக்காக வழங்கப்படவுள்ளன.

ஐக்கிய அரபு அமீரகத்தின் கெப்பிடல் இன்வெஸ்ட்மென்ட் நிறுவனத்தின் நேரடி முதலீடு, அடிப்படையில் குறித்த காணியை கையகப்படுத்துவதற்கான திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த நிறுவனத்துக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்குவதற்காக, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

# 13ஐ நடைமுறைப்படுத்துவதே தமிழர்...

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை மீள நடைமுறைப்படுத்துவதே இலங்கை தமிழர்களுக்கு சம உரிமை வழங்கும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அமையும் என்று பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநில தலைவர் குப்புசாமி அண்ணாமலை தெரிவித்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இங்கிலாந்து பாராளுமன்றத்திலுள்ள ஹவுஸ் ஓஃப் லோட்ஸ் அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார். இலங்கையின் பிரச்சினைகளை தீர்க்கவேண்டிய வரலாற்று கடமை இந்தியாவுக்கு உள்ளதாகவும் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை மீள நடைமுறைப்படுத்துவதே இலங்கை தமிழர்களுக்கு சம உரிமை வழங்கும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அமையும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



## பெயர் நீக்கப்பட்டமையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

அரசின் அஸ்வெசும கொடுப்பனவில் பெயர் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கேப்பாபிலவு மக்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கூடி மாவட்ட செயலக வாயிலை மூடி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை புதன்கிழமை(28) மேற்கொண்டனர்.

இதன் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசின் அஸ்வெசும திட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மேன் முறையீடு செய்யுங்கள் என முல்லைத்தீவு மாவட்டத்தில் பதில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்ரவரன் தெரிவித்துள்ளார்.

## பெண்ணை தாக்கிய நபர் கோபுரத்தில் இருந்து கைது

19 வயதான இளம் பெண்ணொருவரை கூரிய ஆயுதத்தால் தலையில் தாக்கி காயப்படுத்திய 40 வயதான நபரை பிலியந்தலை பொலிஸார் திங்கட்கிழமை (27) கைது செய்துள்ளனர்.

பணிக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும் போதே இந்த சம்பவத்துக்கு அவர் முகம் கொடுத்துள்ளார்.

தாக்குதலை நடத்தியவர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்த பெண், மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சந்தேக நபர் தொலைபேசி கோபுரம் ஒன்றில் ஏறியிருந்த போது பிலியந்தலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## யாழில் ஐஸ்ஸுக்கு இளைஞன் பலி

ஐஸ் போதைப் பொருளை அதிகளவில் நுகர்ந்த இளைஞன் ஒருவன் யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பில் மரணமடைந்துள்ளார்.

ஐஸ் போதை பொருளை அதிகளவில் நுகர்ந்துள்ள நிலையில், அவருக்கு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளதாகவும், இதனையடுத்து அவர் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் எனினும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



## ஆய்வு கருத்தரங்கு

■ எம் எஸ் எம் நூர்தீன்

பொருளாதார அபிவிருத்தி மற்றும் உள்ளூர் மீனவர்கள் அத்துடன் பொது சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழ்கடல் மீன்பிடி துறைமுகமாக விளங்கும் பூநொச்சிமுனை பிரதேசத்தில் நிலையான மீன் உற்பத்தியை அதிகரித்தல் எனும் தொனிப்பொரிலிலான ஆய்வு கருத்தரங்கு பூநொச்சிமனை துறைமுகத்தில் உள்ள ரெசிடென்ஸ் வள வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை (25 ) நடைபெற்றது.

## யாழில் மோட்டார் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

யாழில் மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்றக் குற்றச்சாட்டின் கீழ் பண்டத்தரிப்புப் பகுதியைச் சேர்ந்த 42 வயதான நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன், பாழடைந்த கட்டடமொன்றுக்குள் மறைத்துவைத்திருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். யாழ் மாநகர் ,பளை மற்றும் கொடிகாமம் பகுதிகளில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்களுடனும் சந்தேக நபருக்கு தொடர்புள்ளமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

அஸ்வெசும திட்ட விவகாரம்

# “மேன்முறையீடு செய்யுங்கள்”

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசின் அஸ்வெசும திட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மேன் முறையீடு செய்யுங்கள் என முல்லைத்தீவு மாவட்டத்தில் பதில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்ரவரன் தெரிவித்துள்ளார்

அஸ்வெசும கொடுப்பனவு திட்டத்தில் பெயர் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கேப்பாபிலவு மக்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கூடி மாவட்ட செயலக வாயிலை மூடி கவனயீர்ப்பு போராட்டத்தை புதன்கிழமை (28) மேற்கொண்டனர்.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட பதில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்ரவரன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 23ஆயிரத்தி 901 குடும்பங்கள் சமூர்த்தி பயனாளிகளாக இருந்துள்ளார்கள். அதில் 16 ஆயிரத்தி 211 குடும்பங்களுக்கு




சமூக நலன்புரிசபையின் நன்மைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனால் ஏற்கனவே சமூர்த்தி நன்மையினை அனுபவித்த மக்கள் விடுபட்டுள்ளார்கள்

மாற்றுவலுவுடையவர்கள் பெண்களை தலைமைத்துவமான குடும்பங்களுகம் விடுபட்டுள்ளார்கள் அவர்களிடம் இருந்து மேல் முறையீட்டினை பெற்றுக்கொள்ளும் முகமாக கிராம அலுவலகர் அலுவலகங்களில் முறைப்பாட்டினை ஏற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோன்று ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் விசேடகரும பீடம் அமைக்கப்பட்டு மேன்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. பாதிக்கப்பட்ட பொதுமக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருப்பார்களாக இருந்தால் மேன்முறையீடுகளை மேற்கொள்ளலாம் இணையத்தளத்திலும் முறையிடலாம் என்றார்.

## வழிகாட்டி நூல் வழங்கல்

■ அ . அச்சுதன்

திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றும் மாணவர்களது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு குச்சவெளிக் கோட்டத்தில் உள்ள இரனைக்கேனி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் ஐந்தாம் வகுப்பு மாணவருக்கு



ஒவ்வொன்றும் 1680 ரூபாய் பெறுமதியான ஞானோதயம் என்னும் புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல் வழங்கப்பட்டது.

## சிறுவர்களுக்கான போஷனை கண்காட்சி




■ நூருல் ஹுதா உமர்

தீவிர மந்த போசணை உடைய சிறுவர்களுக்கான போஷனை கண்காட்சியும், விழிப்புணர்வும் ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்க குழந்தைகளுக்கு எப்படி உணவளிக்க வேண்டும் என்ற தொனிப்பொருளில் விளக்கமளிப்பும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம். அஸ்மி தலைமையில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (27) நடைபெற்றது.

## திறமையான பொறிமுறையை நிறுவுதல்



■ நூருல் ஹுதா உமர்

வீட்டுக்குச் செல்லும் முதியவர்களிடையே காசநோயைக் கண்டறியும் முயற்சியில், செவ்வாய்க்கிழமை (27) அம்பாறை மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர். ஏ.எல். அப்துல் கபூரால் மாவட்ட மார்பு சிகிச்சை மையத்தில் பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.


## தொட்டிலில் இறுகி மாணவன் மரணம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

தொட்டிலில் கழுத்து இறுகி, மாணவன் ஒருவன் மரணமடைந்த சம்பவம் நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெலிகொட வத்த எனுமிடத்தில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் செல்வம் டில்சான் (வயது 9) என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

மரணமடைந்த மாணவனின் தாய், வெளிநாட்டுக்கு பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார். தன்னுடைய மூன்றரை வயது தங்கையை தூங்க வைப்பதற்காக அமைக்கப்பட்ட தொட்டிலில், ஊஞ்சல் ஆடிக்கொண்டிருந்த போதே, கழுத்து இறுகி மரணமடைந்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்றபோது வீட்டில் யாரும் இருக்கவில்லை. எனினும், சிறுவனின் உடல் ஊஞ்சலில் தொங்கிக்கொண்டிருப்பதை பார்த்த அயலவர்கள் இதுதொடர்பில், வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே அச்சிறுவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த நாவலப்பிட்டிய பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## துப்பாக்கிச் சூடு : ஒருவர் காயம்

■ யது பாஸ்கரன்

காரில் பயணித்தவர்கள் மீது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரால் புதன்கிழமை (28) அதிகாலை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி - உதயநகர் பகுதியை சேர்ந்த 38 வயதான ஒருவர் இதன்போது காயமடைந்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை கிளிநொச்சி தலைமையக பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.




## வர்த்தக கண்காட்சி

உள்ளூர் சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிக்கும் வகையில் கிளிநொச்சி மக்கள் வங்கி கிளையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட வர்த்தக கண்காட்சி பசுமை பூங்கா வளாகத்தில் செவ்வாய்க்கிழமை(27) இடம்பெற்றது

உலக நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள் தினத்தில் இவ் வர்த்தக கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்து.









## கவனயீர்ப்பு போராட்டம்

கிளிநொச்சியில் நெல்லுக்கான உத்தரவாத விலையை கோரியும் நெல் கொள்வனவுக்கு நிதி ஒதுக்க கோரியும் விவசாயிகளால் கவனயீர்ப்பு போராட்டம் திங்கட்கிழமை (26) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## கௌரவிப்பு

கல்முனை கார்மல் பற்றிமாக் கல்லூரியில் கற்பித்து வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களை பாராட்டி கௌரவிக்கும் பிரியாவிடை நிகழ்வு அண்மையில் கல்லூரி திறந்தவெளியரங்கில் கல்லூரி அதிபர் அருட் சகோதரர் சந்தியாகு தலைமையில் இடம்பெற்றது.



## இறந்த சிறுத்தை மீட்பு

■ பி.கேதீஸ்

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இன்ஜெஸ்ட்ரி தோட்டத்தில் மாலை மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் சிறுத்தையின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

தோட்டத் தொழிலாளி ஒருவர் வழங்கிய அலைபேசி அழைப்பின் பேரில், பொலிஸாரும் நல்லத்தண்ணி வனவிலங்கு அதிகாரிகளும் சம்பவ



இடத்திற்கு செவ்வாய்க்கிழமை (27) சென்ற பார்த்தபோது, தேயிலை தோட்டத்திலுள்ள புதருக்கு அருகாமையில் உயிரிழந்த நிலையில் சிறுத்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சிறுத்தை உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. சிறுத்தையின் சடலம் ரந்தெனிகல கால்நடை வைத்திய பிரிவுக்கு கொண்டு செல்ல நல்லத்தண்ணி வனவிலங்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நல்லத்தண்ணி வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அஸ்வெசும தொடர்பில் தெளிவுபடுத்தல் இல்லை

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியின் போது, அரசாங்கத்துக்கு எதிராகவும் ஜனாதிபதிக்கு எதிராகவும் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், கொஞ்சம், கொஞ்சமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, முழுமையாக முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. சிலநேரங்களில் இரும்புக் கரங்கள் கொண்டும் நசுக்கப்பட்டன.

அதன்பின்னர் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், நீர்த்தாரைப் பிரயோகம், கண்ணீர்ப்புகைக் குண்டுப் பிரயோகம் ஆகியவற்றை கொண்டு முடக்கப்பட்டன. எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை ‘அஸ்வெசும’ சூடுபிடிக்கச் செய்துவிட்டது.

பாமர மக்களுக்கான திட்டமொன்றை முன்னெடுக்கும் போது, அவை தொடர்பில் பாமர மக்களுக்கு அடி மட்டத்தில் இருந்து தெளிவூட்டவேண்டும். இல்லையேல், அதனையும் அரசியலாக்கி பலரும் குளிர்காய்ந்துவிட்டுச் சென்றுவிடுவர். ஆகையால், அஸ்வெசும தொடர்பில் அரசாங்கத்தின் சார்பில் தெளிவூட்டியிருந்திருக்க வேண்டும்.

இந்தத் திட்டமானது *33* இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றது. சமூகத்தில் உள்ள இடைநிலை, பாதிக்கப்படக்கூடிய, வறிய மற்றும் மிகவும் வறுமையான குடும்பங்களுக்கு என நான்கு பிரிவுகளின் கீழ் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

அதுமட்டுமன்றி, அங்கவீனர்கள், முதியவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் ஆகியோருக்கும் இந்தத் திட்டத்தின் ஊடாக நலன்புரி நன்மைகள் வழங்கப்படவுள்ளன. எனினும், அந்த திட்டத்தின் பெயர் பட்டியலில் தங்களுடைய பெயர்கள் இல்லை என்றும் தங்களையும் இணைத்துக் கொள்ளுமாறும் வலியுறுத்தி நாட்டின் பல பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும், இந்தத் திட்டத்தின் பெயர்ப் பட்டியலில் தங்களுடைய பெயர்கள் விடுபட்டிருக்குமாயின் ஜூலை 10ஆம் திகதிக்கு முன்னர் மேன்முறையீடு செய்யுமாறு அரசாங்க அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். எனினும், ஜூலை 1 ஆம் திகதி முதல் மூன்று வருட காலத்துக்கே வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பிலும், சமுர்த்தி உள்ளிட்ட ஏனைய திட்டங்களில் உள்ளீர்க்கப்பட்டு நிதி நிவாரணங்களை பெற்றுக்கொள்வோர், இந்தத் திட்டத்துக்குள் உள்வாங்கப்படுவார்களா? இல்லையென்றால் ஏன்? உள்வாங்கப்படாத பிரிவினரை வகைப்படுத்தி, பூரணமான விளக்கமொன்றை கொடுத்திருந்தால், அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கியிருக்கமாட்டார்கள்.

இதேவேளை, இந்தத் திட்டத்தை தங்களுடைய அரசியல்நலன் சார்ந்ததாக பயன்படுத்திவிடக்கூடாது. அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமாயின் அரசாங்கத்தின் இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

கடன் மறுசீரமைப்பு சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக, பாராளுமன்றம் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கூடுகின்றது. இந்த சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சியினர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

இது, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி உள்ளிட்ட பொது நிதியங்களின் உறுப்பினர் மிகுதியில் எந்த பாதிப்பும் ஏற்படாது என்று தெரிவித்துள்ளனர். எனினும், இந்த சட்டமூலம் தொடர்பிலும், அஸ்வெசும குறித்தும் மக்களிடத்தில் சரியான தெளிவு இல்லை என்பதை ஞாபகமூட்டுகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ரணில்; பச்சோந்தி அரசியலின் தலைமகன்!



**புருஜோத்தமன் தங்கமயில்**

‘தமிழ் மக்கள் இன ரீதியான அடக்குமுறைகளை எதிர்கொண்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு அரசியல் தீர்வு அவசியமானது’ என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த காலங்களில் தெரிவித்திருக்கிறார். இலங்கையின் ஆட்சி பீடத்தில் ஏறிய அல்லது ஏற நினைக்கும் வேறெந்த சிங்களத் தலைவரும் தமிழ் மக்கள் இன ரீதியான அடக்குமுறைக்கு உள்ளாகி வருகிறார்கள் என்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிப்படுத்தியதில்லை. ரணில் மாத்திரமே, தமிழ் மக்கள் இன ரீதியான அடக்குமுறையை எதிர்கொண்டு வருகிறார்கள் என்று வெளிப்படையாக கூறியிருக்கிறார். எனவே, நாட்டில் நீடித்துவரும் இனப்பிரச்சினைகளுக்கான தீர்வைக் காண்பது தொடர்பில் அவரிடம் அர்ப்பணிப்பு காணப்படுவதாக கொழும்பு மைய தாராளவாதிகள் தொடர்ச்சியாக வாதிக்கிறார்கள்.

ரணில் தன்னுடைய ஐம்பது ஆண்டுகளைத் தாண்டி அரசியல் வரலாற்றில் பாராளுமன்ற உறுப்பினர், அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர், ஜனாதிபதி என்று அனைத்துப் பதவிகளையும் வகித்திருக்கிறார். ஆனால், ஜே.ஆர்.ஜெயவர்த்தன. ரணசிங்க பிரேமதாச, சந்திரிக்கா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தங்களின் ஆட்சிக் காலத்தில் செலுத்திய அதியுச்ச அதிகாரத்தை அவர் ஒருபோதும் கொண்டிருக்கவில்லை. இடைக்காலப் பிரதமர், அல்லது இன்னொரு ஜனாதிபதியின் கீழான வலுவற்ற பிரதமர் போன்ற படிநிலைகளில் அவர் இருந்திருக்கிறார். நல்லாட்சிக் காலத்தில் மாத்திரம் கிட்டத்தட்ட ஜனாதிபதிக்கு நிகரான ஒருவராக அவர் பிரதமர் பதவியில் இருந்தார். ஆனால், அப்போது தென் இலங்கையில் ராஜபக்ஷக்கள் அபரிமிதமான ஆதரவை சேர்த்துக் கொண்டு, ஆட்சிப் பீடத்தில் ஏறுவதற்கு தயாராக இருந்தார்கள். இப்போது, ரணில் நிறைவேற்று ஜனாதிபதி என்ற தோரணையில் பதவியில் இருந்தாலும் அவர் அமர்ந்திருக்கும் ஆட்சிக் கட்டில் ராஜபக்ஷக்கள் போட்டது. பாராளுமன்றத்துக்கு வெளியில் அறிக்கை அரசியலில் எதனை வேண்டுமானாலும் ரணில் செய்து கொள்ளலாம். ஆனால், பாராளுமன்றத்தில் அவரால் ஒரு குண்டூசியை நகர்த்துவதாயினும் ராஜபக்ஷக்களின் அனுசரணை வேண்டும். அப்படிப்பட்ட நிலையில், நிறைவேற்று அதிகார பொறுப்பில் இருந்தாலும், உண்மையில் பல விடயங்களில் எந்தத் தீர்மானத்தையும் உறுதியாக எடுப்பதற்கான நிலையில் அவர் இல்லை. அப்படிப்பட்ட ஒருவர், அரசியல் தீர்வு என்ற அறுதியான அரசியல் தீர்மானத்தின் பக்கம் உறுதியாக நிற்பார் என்று மக்களை நம்ப வைக்க முயல்வது அபத்தமானது.

பிரான்ஸில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த ரணிலிடம், புலம்பெயர் செயற்பாட்டாளர் ஒருவர், இலங்கையின் மனித உரிமை விடயங்கள் தொடர்பில் ஆங்கிலத்தில் கேள்வி எழுப்பினார். அப்போது, குறுக்கிட்ட ரணில், கேள்வி எழுப்பியவரிடம், ‘நீங்கள் என்ன கூற முயல்கிறீர்கள் என்று புரியவில்லை. ஆங்கிலத்தில் பேசுவதில் சிக்கல் இருந்தால், தமிழில் கேள்வி எழுப்புங்கள். எனக்கு தமிழ் புரியும்..” என்றார். அதனையடுத்து குறித்த செயற்பாட்டாளர் தமிழிலும் ஆங்கிலத்திலும் கேள்வியை எழுப்பினார். அப்போது, ரணில், ‘நீங்கள் இலங்கை வாருங்கள்..” என்று கூறிவிட்டு, கேள்வியைத் தவிர்த்துவிட்டார். இந்தச் சம்பவத்தில் ரணில் நடந்து கொண்ட விதத்தைப் புரிந்து கொண்டாலே போதும், அரசியல் தீர்வினைக் காணுவதற்கு அவர் உண்மையில் அக்கறையை கொண்டிருக்கிறாரா, இல்லையா என்பதை உணர்ந்து கொள்வதற்கு.

இலங்கையில் மனித உரிமை விடயங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்றது. அதனை ஐக்கிய நாடுகள் தொடங்கி சர்வதேச சமூகங்கள் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வந்திருக்கின்றன. ரணில், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலங்களில் நாட்டில் தொடரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்திருக்கிறார். சர்வதேச நாடுகளிடமும் தூதுவராலயங்களிலும் முறையிட்டும் வந்திருக்கிறார். ஆனால், ஆட்சிக்கு வந்ததும், அவ்வாறான விடயங்கள் நடைபெறாதது மாதிரி நடந்து கொண்டிருக்கிறார். ராஜபக்ஷக்களை வீட்டுக்கு விரட்டும் போராட்டத்தை ஆரம்பத்தில் ஆதரித்து வந்த ரணில், ராஜபக்ஷக்கள் பிரதமர் பதவியை வழங்கியதும் போராட்டத்தையே அடக்கி ஒடுக்குவதற்கான ஏற்பாடுகளோடு முன்வந்தார். அவர், ஜனாதிபதியானதும், காலி முகத்திடலில் இருந்து போராட்டக்காரர்களை இராணுவ முனையில் வெளியேற்றினார்.

> **பேச்சுக்களில் காணப்பட்ட இணக்கப்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பில் எந்த முயற்சிகளையும் அரசாங்கம் எடுத்தில்லை**

பிரான்ஸ் நிகழ்வில் புலம்பெயர் செயற்பாட்டாளர் ஆங்கிலத்தில் எழுப்பிய கேள்வியை அனைவராலும் புரிந்து கொள்ளும் அளவுக்கு இருந்தது. ஆனால், அந்தக் கேள்வியை தவிர்ப்பதற்காக கேள்வி எழுப்பியவரின் ஆங்கில மொழி ஆளுமையை நக்கல் பண்ணுதல் என்பது, மிக மோசமான அரசியல்வாதிக்குரிய பண்பாகவே கொள்ள வேண்டும். அதுபோக, ரணில் தனக்கு தமிழ் மொழியறிவு இருப்பதாக இதற்கு முதல் எங்குமே வெளிப்படுத்தியதில்லை. உண்மையில் அவருக்கு தமிழைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு மொழியறிவு இல்லை. அப்படிப்பட்ட ஒருவர், தமிழில் கேள்வி எழுப்புங்கள், தனக்கு புரியும் என்பது எல்லாம் என்ன வகையிலான அகந்தையின் வெளிப்பாடு? நாட்டின் மனித உரிமை விடயங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பினால், அதன் நிலை குறித்து பதிலளிப்பதில் அவர் இவ்வளவுக்கு பின்நிற்கிறார் என்றால், அவரின் அறிக்கை அரசியலின் மீது எப்படி நம்பிக்கை கொள்ளவது?

நாட்டின் இனப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான நல்லதொரு சந்தர்ப்பம் நல்லாட்சிக் காலத்தின் ஆரம்ப நாட்களில் ஏற்பட்டது. புதிய அரசியலமைப்பின் ஊடாக அதனை அடைந்திருக்க முடியும். ரணில் மீது நம்பிக்கை வைத்து இரா.சம்பந்தனும் எம்.ஏ.சுமந்திரனும் புதிய அரசியலமைப்பை தமிழ் மக்களிடம் பிரபலப்படுத்துவதற்காக தலையால் நடந்தார்கள். ஏன், சிங்கள மக்களிடமும் புதிய அரசியலமைப்புக்காக பிரச்சாரங்களைச் செய்து வந்தார்கள். அதுவும், தமிழ் மக்கள் கோரும் அரசியல் தீர்வுக்கும், புதிய அரசியலமைப்பில் முன்மொழியப்பட்ட அதிகார பரவலாக்கத்திற்கும் மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசம் உண்டு. அத்தோடு, பௌத்தத்துக்கு முதலிடம் என்ற இயற்கை நீதிக்கு முரணான ஒன்றை அரசியலமைப்பில் உள்ளடக்குவதற்கு சம்பந்தனும் சுமந்திரனும் இணங்கினார்கள். இதனால், அவர்கள் இருவரும் தங்களின் அரசியல் செல்வாக்கை பெருமளவு இழக்கும் நிலை ஏற்பட்டது. இவ்வளவு விட்டுக்கொடுப்புக்களோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நல்லாட்சியோடு இணங்கிச் செயற்பட்ட போதும், ரணில் புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை. மாறாக, தன்னுடைய ஆட்சி அதிகாரத்தை தக்க வைப்பதற்கான நடவடிக்கைகளிலேயே கவனம் செலுத்தினார். தென் இலங்கையில் ராஜபக்ஷக்கள் ஆதரவு நிலை அதிகரிக்கின்றது என்பதற்காக புதிய அரசியலமைப்பை குப்பையில் தூக்கிப்போட்டவர். இதுவெல்லாம் இருபது முப்பது வருடங்களுக்கு முதல் நடைபெற்ற நிகழ்வுகள் அல்ல. கடந்த ஐந்தாறு வருடங்களுக்கு நிகழ்ந்தவை.

சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு, அல்லது வேறொரு தினத்துக்கு முன்னர் தீர்வு என்று அறிவிப்பதும், தமிழ்த் தரப்புக்கள் பேச்சுக்காகச் சென்றால், ஒவ்வொரு முறையும் புதிதான விடயமொன்றைப் பேசப்போவது போல, நடந்து கொள்வதும் தென் இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு ஒன்றும் புதிதல்ல. அதற்கு ரணிலும் விதிவிலக்கல்ல. முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னர், தென் இலங்கை ஆட்சியாளர்களோடு முப்பது தடைவைகளுக்கும் மேலாக அரசியல் தீர்வு குறித்து தமிழ்த் தரப்புக்கள் பேசிவிட்டன. ஒவ்வொரு முறையும் பேச்சுக்கள் புதியது போலவே நடைபெற்றிருக்கின்றன. பேச்சுக்களில் காணப்பட்ட இணக்கப்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பில் எந்த முயற்சிகளையும் அரசாங்கம் எடுத்தில்லை. இப்போது, ரணில்- ராஜபக்ஷ அரசாங்கமும் அப்படித்தான் செயற்பட்டு வருகின்றது. அப்படியான நிலையில், ரணில், இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணுவதற்கான அர்ப்பணிப்போடு இருக்கிறார் என்று வாதிடுபவர்களின் நிலைப்பாட்டினை எவ்வாறு அணுகுவது? அது அபத்தத்தின் தொடர்ச்சி மாத்திரமே.



## வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் ஆழ்மனதில், தான் ஒரு சுதந்திர புருஷன் என்பதை மனதில் நிறுத்தினால், அடிமை எண்ணம் பொடிப்பொடியாகிவிடும்.

திறமை, நேர்மை உடையவர்களுக்கு நேரிய சிந்தனைகள் தானாகவே பரிமளிக்கும். சாதி, சமய , மொழி பேதங்களைச் சொல்லியே தகுதி அற்றவர்களும் உயர்நிலைக்கு வர ஆசைப்படுகின்றார்கள்.

அம்பேத்கார் பெரும் கல்வியாளர்; அரசியல் சட்ட வல்லுநர். அவர் சாதியைப் பேசுபவர்களைக் கண்டுகொள்ளாமல், தனது சாதனைகளில் குறியாக இருந்தார். இந்திய அரசமைப்பை உருவாக்கினார்.

திறமை இருந்தால், எவரையும் உலகம் ஏற்றுக்கொள்ளும். விரும்பியவாறு படிப்பதற்கு எவருக்கும் உரிமையுண்டு. கௌரவங்கள் ஒருவரின் சாதனைகளில் அடங்கியுள்ளது.

ஒருவர் முன்னேற முடியாது என எண்ணுவதே கோழைத்தனம்..

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதியின் அவலத்தை பாருங்கள்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட முதலாம் வட்டாரம் பகுதியில் அமைந்துள்ள சுண்ணாம்புகுளை வீதி, புனரமைக்கப்படாமையால், மழை வெள்ளம் ஓடிக்கொண்டிருக்கிறது. இதனால், வீதியால் பயணிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குச் சொந்தமான குறித்த வீதி, இதுவரை புனரமைக்கப்படாத நிலையாலேயே போக்குவரத்து செய்வதில் மக்கள் பாரிய சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

மக்களிடம் வாக்கு கேட்பதற்காக வரும் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் வட்டார உறுப்பினர் ஆகியோருக்கு நீண்டகாலமாக தெரியப்படுத்தியும் இந்த வீதி திருத்திக் கொடுக்கப்படவில்லை.

தற்போது இந்தக் கிராமத்துக்கான வீதியில் விளக்குகள் கூட பொருத்தப்படாத நிலை காணப்படுவதாகவும் யானைகள் வந்து, தற்போது அட்டகாசம் புரிந்து, தென்னம்பிள்ளைகள் மற்றும் வாழ்வாதாரம் தரும் மரங்ளையும் அழித்துவிட்டுச் செல்கின்றன என்றும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியால், பாடசாலை மாணவர்கள் சீருடையுடனும் நோயாளர்கள் அவசரமாக மருத்துவமனைக்கும்கூட செல்லமுடியாத நிலையில் தாங்கள் இருப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

எனவே, புதுக்குடியிருப்பு பிரதேச சபை, தமதுன் குறைகளை நிவர்த்தி செய்யக்கூடியவாறு, விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறித்த மக்களால் வேண்டுகோள் முன்வைக்கப்படுகின்றது.

செ. கீதாஞ்சன்

# சரித்ராவைப் பற்றி...







சரித்ரா என்பவர் பேச்சாளர், அமேசான் எழுத்தாளர், இசைக்கலைஞர், content எழுத்தாளர், டிஜிட்டல் கலைஞர் என பன்முகம் கொண்ட ஓர் சிறந்த படைப்பாளி எழுத்தாளர் சரித்ரா அவர்கள்.இயற்பெயர் அரவிந்த்.பிறந்தது வளர்ந்தது எல்லாம் தமிழ்நாடென்றாலும் வேலை நிமித்தமாக கத்தாரில் வாழும் இக்கலைஞன் தன்பதிவுகளால் தமிழோடும் தமிழ் மக்களோடும் என்றும் தொடர்பில் இருப்பவர்.

இலங்கை,ஜெர்மனி,சிங்கப்பூர்,லண்டன் என இவரது ரசிகர் வட்டம் பெரியது.தமிழ் மேல் தீரா பற்றுக்கொண்டு இயன்றவரை அதை மேலும் வளர்க்க முயற்சிக்கும் ஒரு எளிய படைப்பாளி.பல அறிய வார்த்தைகள் தாங்கி வரும் இவரது கவிதைள் புதிய நடையில் அற்புதமான உணர்வு தருபவை.

வாழ்வின்
ஒவ்வொரு
நொடியையும்
அழகாய்
செதுக்கும்
சிற்பி!

### அவர் எழுத்து செய்யும் மாயம்

வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் ரசித்து வாழ்வதோடு மட்டுமல்லாமல் தன்னெழுத்தால் பிறரையும் ரசித்து வாழ கற்றுக்கொடுப்பவர்.

கவிதை,சமூகம், பெண்ணியம் என ஒவ்வோர் பதிவிலும் வேறுபடும் அவரெழுத்து.மடை திறந்த வெள்ளம் போல் மனதில் இருப்பதை அழகாய் எழுதுவதில் வல்லவர். ஒவ்வொரு பதிவும் ஒவ்வோரு ரகம்.படிக்கும் மனநிலைக்கேற்ப அந்த எழுத்து மாறும் ரகசியம் தெரியாது.ஒரு கதை படித்தால் அதன் தாக்கம் சில நாள் இருக்கும். இவர மாதிரி எழுதினால் வாழ்க்கையோடு அது பயணிக்கும்.

சில நேரம் தைரியம் கொடுக்கும்.
சில நேரம் ஆறுதல் அளிக்கும்.

இவரோட எழுத்துநடை,கவிதை நடை எல்லாம எதார்த்தமா எளிதில் பொருள் புரியும் படி புதுமையா இருக்கும். மொத்தத்துல நான் பார்த்து பார்த்து வியக்கும் எழுத்தாளர்.

வாழ்வின் சில எதார்த்தங்களை எளிதில் புரியவைத்து மனதை தெளியவைத்து

நிம்மதி கொடுக்கும் இவரெழுத்து என்றுமே என் தன்னம்பிக்கையின் ஊற்று.

பூவுலகை
புதிய
உலகாக
மாற்றி
காணத
இன்பமெல்லாம்
கண்முன்னே
அள்ளித்தரும்...
சிந்தனையை
செதுக்கி
தன்னிலை
உணரவைக்கும்...
சுயமுணர்த்தி
அகம்தெளிந்து
வாழ்வு
செழிக்கவைக்கும்...
உன்னத
எழுத்துகளும்
தெய்வீகம்தான்...!

### மாற்றம் கொண்ட மங்கைகள்

இவரெழுத்தால் மனமாற்றம் கிடைத்திருக்கிறது என்றும் தன்னம்பிக்கை தைரியம் கூடியிருக்கிறது என்றும் தனது சுயத்தை உணர்ந்ததாகவும் பலர் கூறியிருக்கின்றர்.

கணவனால் கைவிடப்பட்ட பெண்ணொருத்தி இவர் பதிவுகளை படித்து சுயமாய் வாழ்வதை நானறிவேன். பத்தாம் வகுப்பே படித்தவள் பல கவிதை படைப்பதையும் கண்கூடாக காண்கிறேன்.இளம் வயதிலிருந்து தாயால் தனியாக வளர்க்கப்பட்டவள் இந்த எழுத்தின் தூண்டலால் கல்வித்துறையில் பணிபுரிகிறாள்.இவனே வாசுதேவன் என பெரிய எழுத்தாளினி ஒருவர் இவரைப்பற்றி "வாசுவின் தேவதைகள்" என்னும் நூல் படைத்து இவருக்காக அர்பணித்திருக்கிறார்.

இவரோட வாழ்வோடு இயைந்த எழுத்துகள் பலருடைய பிரச்சனைகளுக்கு தீர்வாக அமைகிறது என்பதே உண்மை. அந்த பதிவை எந்த சூழலில் படித்தாலும் என் கஷ்டம் பறந்தோடும்.தன்னம்பிக்கை வளர்க்கும் பதிவு.

உறவற்று
உணர்வற்று
மனமற்று
வாழ்வற்ற
நிலைவேண்டாம்....
பிடித்தால்
போற்றும்
நடித்தால்
போற்றும்
உறவுவேண்டாம்...
தன்னிலையுணர்த்தி
தரமுயர்த்தி
வாழ்வை
செப்பனிடும்
ஒருயிரெழுத்து...
தடைதாண்டி
விடைதேடி
எதிர்காலத்தை
கட்டமைக்கும்
உன் மெய்யெழுத்து...
போதுமடா...!

### ஏன் ரசிகைகள் ஏராளம்

பெண்ணியம் பற்றி அதிகமாக எழுதியுள்ளார்.அவை பெண்ணவளின்

பெருமை பற்றியும்,விழிப்புணர்வு பதிவுகளாகவும் உள்ளது.படிக்கும் போதே பெண்கள் தங்களை தாங்களே நேசிக்கும் படியாகவும் தன்னம்பிக்கை வளர்க்கும் படியாகவும் இருக்கும்.

வேலைக்கும் செல்லும் பெண்கள் படும் அவஸ்தை,ஊனம் பற்றிய கவிதைகள்,மார்பகபுற்று நோய் பற்றிய விழிப்புணர்வு,தன் தாய் பற்றிய அவரது வரிகள்,மகளிர் தின கவிதைகள்,கற்றலெனும் போதை,எட்டுத்தொகை காதல் என எல்லா பதிவுகளும் பெண்களை போற்றுபவையே. எனவே எல்லா வகை பெண்களையும் இவரெழுத்து ஈர்ப்பது ஆச்சரியமல்ல. பல பெண் கவிஞர்ளை எழுத்தாளர்களை உருவாக்கியிருக்கிறது இவரது கவிதைகள் .

மேலும் எந்த ஒரு முகநூல் குழுக்களிலும் இல்லாத நட்புக்கள் இவரது பக்கத்தில் கிடைக்கிறது.நல்ல கருத்துகளை மட்டுமே பதிவு செய்யும் நல்ல உள்ளங்கள்.வீண் விவாதங்கள் அங்கில்லை.குழுவை தவிர்த்து வேறெங்கும் பேசாத கன்னியமான உள்ளங்கள்.மொத்தத்தில் பெண்களுக்கு பாதுகாப்பான ஓரிடம் .ஆண் ரசிகர்களும் இவருக்கு தாராளம்.

ஓர் பதிவில் வரும் ஒரு வார்த்தை,ஒரு பெண் ஓர் ஏழை சிறுமிக்கு உதவ காரணமாகிறதென்றால் இவர் எழுத்தின் தாக்கம் பற்றி புரிந்து கொள்ள முடிகிறது. தன் மகளின் நின்று போன திருமணம் மீண்டும் கைகூட ,தைரியமாய் சமுதாயத்தை எதிர்கொள்ள தாயொருத்தி இவரெழுத்தை நாடுவதும் ஆச்சரியமே.

சுகவீனப்பட்டு
கிடக்கும்
மனங்களை
எல்லாம்
சுவீகரித்து
சுகப்படுத்துகிறது
இவனெழுத்துகள்....

SH எனக்குள் ஏற்பட்ட தாக்கம்

என் தந்தை icu வில் இருக்கும் போது கொரோனா பரிசோதனை செய்து யாரும் உள்ளே அனுமதிக்கப்படாத நிலையில் நான் மட்டும் தன்னந்தனியாய்,மிகப் பெரிய மருத்துவமனையில். தந்தை உடல்நலம் தேறிவர பிரார்த்தனை ஒரு பக்கம் கொரானா நோயாளிகளை நேரில் பார்த்து பயம் ஒரு பக்கம் மன வேதனையின் பாரம் தாங்க இயலாத நிலையில் நான்.

அப்பொழுது கையில் இருந்த ஒரே துணை
என்
கைபேசி.வெகுவாய்
என் மனநிலை மாற்றி இவரது பதிவுகள் கொஞ்சம் வாசிக்கவும் நிறைய சுவாசிக்கவும் வைத்தது.நிம்மதி கொடுத்தது. துணையாய் இருந்தது.ஆறுதல் அளித்தது. அதில் இருந்து இன்றுவரை எனக்கு பலவற்றை கற்றுக்கொடுக்கிறது இவரது பதிவுகள்.

உண்டென்றாலும்
இல்லையென்றாலும்
நன்றென்றும்
தீதென்றும்-பிரித்தறிய
முடியாதொன்றை
பற்றியறிந்து
பற்றற்று வாழ
வழி தந்தருளும்
குருவே -நீ
மொழிந்தவற்றின்
விளைவை
நானுணர்ந்ததை
நீயன்றி
யாரறிவா...!

### நானாக நான்...

பலர் முன்னிலையில் நாலு வார்த்தை தொடர்ந்து பேசினாலே எனக்கு வாய் திக்கும்.எதாவது தவறாக பேசிவிடுவோமே என்ற பயம்.தெரிந்தாலும் பதில் சொல்ல தயக்கம்.இவரேழுத்து குருவாய் பலவற்றை கற்றுக் கொடுக்கிறது. தன்னம்பிக்கை,மனதிடம் என எல்லாவற்றையும் அள்ளித்தரும் பதிவுகளுக்கு சொந்தகாரர்.

ஒவ்வொரு முறை இவரது பதிவுகளில் நான் இடும் comment களுக்கு கிடைக்கும் அங்கீகாரமும் பாராட்டல்களும் என மனதை வலுபடுத்தி என் கருத்தை உரக்க சொல்ல துணை நிற்கிறது. என்மாற்றம் இவர் எழுத்துகளில் துவங்கியிருக்கிறது. ஒவ்வொருவரின் எழுத்துகளையும் பாராட்டி மேலும் எழுத தூண்டுகோலாய் இருக்கிறார்.

எண்ணத்தில்
உன்னை
வைத்து
தொடரும்
பயணம்
சுகமானதுதான்...!
இயன்றவரை
என்னுள்
பரவச்செய்
உன்சிந்தனைகளை...!
என்வாழ்வும்
கொஞ்சம்
செழுமையாகட்டுமே...!
பூவுலகை
ரசிக்கின்றேன்
உன்கண்கொண்டு
மன்கொண்டு
யாவும் பேரழகு....!

### எதிர்பார்ப்புகள்

மென்மேலும் இவரது எழுத்து இணையம் தாண்டி புத்தகமாக எளிய வாசிப்போருக்கும் கிடைக்க வேண்டும் என்பதுதான் என் அவா.

சுடரோனின்
சுயமில்லா
எழுத்தும்...
சுயமுணர்த்தும்
கருத்தும்...
சுண்டியிழுக்கும்
கவியும்...
சற்றும்
தடையின்றி...
சுற்றும்
புவியெங்கும்...
சுடர்விட்டு
மிளிரட்டும்..!

வாழ்த்துகள் சரித்ரா
அன்புடன் ராதா

# இலங்கையில்
## சுற்றுலாத்துறையை மேம்படுத்த USAID, SLTDA அறிமுகப்படுத்தும் திட்டம்



கொழும்பு இலங்கை ; சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனமும் (USAID) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையும் (SLTDA) இணைந்து சுற்றுலாத்துறையில் பல முக்கிய புதிய பிரிவுகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் இலங்கையில் வீழச்சியடைந்திருந்த சுற்றுலாத்துறைக்கு புத்துயிரளித்துள்ளன. சாகச சுற்றுலாப்பயணம் முதல் கலாசார அனுபவங்கள் ஆரோக்கியம் மற்றும் குணப்படுத்தும் சிகிச்சைகள் என்பன வரையாக உள்ளடங்கியிருக்கும் இப்பிரிவுகள் இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு கூடுதல் அனுகூலங்களை வழங்குவதோடு அதிகளவிலான சர்வதேச ரீதியான உல்லாசப் பயணிகளையும் கவரும்

கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இலங்கைக்கான உல்லாசப் பயணிகளின் வருகையானது முதல் காலாண்டில் 30 வீதம் அதிகரித்தது எனினும் இந்த பிரிவு மிகவும் போட்டித்தன்மை வாய்ந்தது. புதிய மூலோபாயத்தின் வெற்றிகரமான அமுலாக்கமானது இலங்கை தனது வர்த்தக நாமத்தை சிறப்பாக நிலைநிறுத்துவதற்கும் இலங்கையை நோக்கி உல்லாசப் பயணிகளைக் கவர்தல் மற்றும் சந்தைப் பங்கை அதிகரிப்பதற்கும் சுற்றுலாத் துறை முழுவதும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் மற்றும் அவசியமாகத் தேவைப்படும் அந்நிய செலாவணியை உருவாக்குவதற்கும் அனுமதிக்கும். இந்த மூலோபாயத்தின் ஆரம்பமானது USAID இன் இந்தோ-பசுபிக் வாய்ப்பளிக்கும் திட்டத்தின் ((IPOP),) ஒரு வலுவான முன்னோடியாகும். மேலும் இது SLTDA க்கு முக்கிய சுற்றுலா வணிகங்களை முறைப்படியாக செயற்படுத்தவும் முன்னோக்கிச் செல்லும் முயற்சிகளை வரையறுக்கவும் உதவும். கொவிட் தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து மீண்டு தற்போது பொருளாதார நெருக்கடியைக் கையாள சுற்றுலா இலங்கையின் பொருளாதாரத்திற்கு முக்கியமானது. தொற்றுநோய்க்கு முந்தைய காலத்தில் சுற்றுலா நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 சதவீதமாக இருந்தது. 2018 இல் 4.3 பில்லியன் அமெரிக்க டொலர் வருவாயை அது ஈட்டியது ஏற்கனவே அதன் இயற்கை அழகு மற்றும் கலாசார பாரம்பரியத்திற்காக ஒரு சுற்றுலாத் தலமாக பிரபலமடைந்துள்ள இலங்கை விடுமுறை அனுபவத்தில் மூழ்க விரும்பும் சுற்றுலாப் பயணிகளுக்கு வித்தியாசமான அனுபவங்களை வழங்குவதன் மூலம் புதிய உத்தியிலிருந்து பயனடையும்.

இலங்கையில் இந்த ஆண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது" என இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான USAID பணிப்பாளர் Gabriel Grau ஜூன் மாதம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட வெளியீட்டு நிகழ்வில் தெரிவித்தார்.

பாணந்துறையில் உள்ள பார்ன்ஹவுஸில். நடைபெற்ற இந்நிகழ்வில் Gabriel Grau மேலும் கூறுகையில் "கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக பல வருடங்களாக பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து உலகளாவிய சுற்றுலாத் தலமாக அதன் முழு திறனையும் உணர இலங்கை மீண்டும் தயாராக உள்ளது என்பதை இது காட்டுகிறது. புதிய நிலையான சுற்றுலா மூலோபாயம், இந்த எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க உதவுவதோடு, இலங்கையின் சுற்றுலாத் துறை மீண்டும் பாதையில் செல்லவும், நாட்டின் பொருளாதார மீட்சியை மேம்படுத்தவும் உதவும். இந்த முக்கியமான துறையில் USAID ஈடுபட்டுள்ளது இலங்கையில் பொருளாதார ஸ்திரத்தன்மை திரும்புவதற்கு நாங்கள் ஆதரவளிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். 75 வருடங்களாக அமெரிக்கா இலங்கையுடன் இணைந்து பணியாற்றியுள்ள நிலையில் இது ஒரு வலுவான கூட்டாண்மையாகத் தோற்றமளிக்கிறது" என்றார்.

"இலங்கையில் ஒரு புதிய நிலையான சுற்றுலா மூலோபாயத்தை நாங்கள் ஆரம்பிப்பதால் இன்று இலங்கையின் சுற்றுலாவுக்கு ஒரு சிறப்பான நாள். இந்த முக்கிய தயாரிப்புகளை முன்னிலைப்படுத்தவும் ஆதரிக்கவும் மற்றும் மேம்படுத்தவும் இலங்கையின் சுற்றுலா ரீதியான சலுகைகளை நிலைநிறுத்துவதற்கான ஒரு புதிய முன்னுதாரணத்தை இது குறிக்கிறது. அதிக வருமானம் தரும் அனுபவத்தால் உந்தப்பட்ட இடமாக இருப்பதற்கான திறனை முழுமையாகப் பயன்படுத்த இலங்கைக்கு உதவும் "என்று SLTDA இன் துணை பணிப்பாளர் நாயகம் உபாலி ரத்நாயக்க கூறினார்.







# சூரியனை விட 30 பில்லியன் மடங்கு பெரிய கருந்துளை

சூரியனை விட 30 பில்லியன் மடங்கு பெரிய கருந்துளையை வானியல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதுவரை கண்டறியப்பட்டதில் இதுதான் மிகப்பெரும் கருந்துளை என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

உயிரினங்கள் வசிக்கக்கூடிய பூமி, சூரிய குடும்பத்தை சேர்ந்ததாகும். சூரியன் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான நட்சத்திரங்கள் இணைந்து பால்வெளி அண்டம் என்று அழைக்கப்படுகிறது.

இந்த பால்வெளி அண்டத்தின் மையப்பகுதியில்



மிகப்பெரிய கருந்துளை இருப்பதாக விஞ்ஞானிகள் முன்பு கண்டுபிடித்திருந்தனர். நடைமுறையில் இருக்கும் இயற்பியல் விதிகளுக்கு அப்பாற்பட்டு கருந்துளைகள் செயல்படுகின்றன. இதனை கடந்து செல்லும் எதனையும் உள்ளே இழுத்துக் கொள்ளும் ஆற்றல் கருந்துளைக்கு உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. அந்த வகையில் சூரியனைக்கூட இவை உள்ளே இழுத்துக்கொள்ளும் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், சூரியனை விடவும் 30 பில்லியன் மடங்கு பெரியதான கருந்துளை ஒன்றை வானியல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். ஒரு பில்லியன் என்பது 100 கோடியாகும். பென்ட் லைட் எனப்படும் அறிவியல் முறை மற்றும் ஈர்ப்பு விதியை பயன்படுத்தி இந்த கருந்துளை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## விமான எஞ்சினுக்குள் இழுக்கப்பட்ட பணியாளர் பலி

நின்று கொண்டிருந்த விமானத்தின் எஞ்சினுக்குள் இழுக்கப்பட்ட விமான நிலைய பணியாளர் ஒருவர் உடல் சிதைந்து உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் விமான நிலையத்தில் இந்த சம்பவம் நடந்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் இருந்து




சான் ஆன்டோனியோ, டெக்சாஸ் விமான நிலையத்திற்கு டெல்டா நிறுவனத்தை சேர்ந்த விமானம் வந்திறங்கியது. பயணிகள் இறங்கிய பின்னரும், விமானத்தின் ஒரு எஞ்சின் சுற்றிக் கொண்டே இருந்துள்ளது. இதனை யூனிஃபை நிறுவனத்தை சேர்ந்த பணியாளர் ஒருவர் சரியாக கவனிக்கவில்லை. அவர் விமானத்தின் அருகே சென்றபோது அதிக அழுத்தம் காரணமாக பணியாளரை எஞ்சின் உள்ளே இழுத்துக் கொண்டது. இந்த சம்பவத்தில் அவர் உடல் சிதைந்து உயிரிழந்துள்ளார்.

நியூயோர்க்:

## அமெரிக்காவில் தீபாவளி விடுமுறை

அமெரிக்காவின் நியூயோர்க் நகரப் பாடசாலைகளில் இனி தீபாவளிப் பண்டிகை விடுமுறை அளிக்கப்படும் என்று அந்த நகரத்தின் மேயர் எரிக் ஆடம்ஸ் அறிவித்துள்ளார்.

அவருடைய அறிவிப்பு இந்திய சமூகத்தினர் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பலரும் இந்த அறிவிப்புக்கு நன்றி தெரிவித்து சமூகவலைதளங்களில் மகிழ்ச்சியைப் பகிர்ந்து வருகின்றனர். அந்தவகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதில் தான் பங்குவகித்தது மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக நியூயோர்க் நகர மேயர் எரிக் ஆடம்ஸ் கூறியுள்ளார்.




இது குறித்து அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், "நகரப் பேரவை உறுப்பினர் ஜெனிபர் ராஜ்குமார் மற்றும் சமுதாயத் தலைவர்களுடன் இணைந்து தீபாவளிப் பண்டிகைக்கு பாடசாலைகளில் விடுமுறை விடுவதைப் பெற்றுத் தந்ததில் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன். தீபாவளி வாழ்த்துகளை இப்போதே தெரிவிப்பதற்கு இது சரியான காலக்கட்டம் அல்ல எனத் தெரியும். இருப்பினும் மகிழ்ச்சியுடன் சொல்கிறேன் தீபாவளி வாழ்த்துகள்" என்று பதிவிட்டுள்ளார்.

## ஏழு பிள்ளைகளுடன் பயணித்த தந்தை கைது

மும்பை

மும்பையில் இளநீர் வியாபாரம் செய்து வரும் ஒருவர், ஒரே இருசக்கர வாகனத்தில் 7 பிள்ளைகளை ஏற்றி சென்ற வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவிய நிலையில் பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

அந்த வீடியோவில் தலைக்கவசம் அணியாமல் பிள்ளைகளை பாதுகாப்பற்ற முறையில் அழைத்து



சென்றது பதிவாகியுள்ளது. தனது நான்கு பிள்ளைகள் மற்றும் பக்கத்து வீட்டுக்காரரின் 3 பிள்ளைகள் என 7 பிள்ளைகளை ஒரே ஸ்கூட்டரில் அவர் அழைத்து சென்றுள்ளார்.

ஸ்கூட்டரில் உட்கார இடம் இல்லாத சிறுவன் பின் பக்க கம்பியில் நின்றுக்கொண்டு பயணிக்கும் காட்சிகளும் அந்த வீடியோவில் பதிவாகியுள்ளது. இது குறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார் இளநீர் விற்பவரை கைது செய்து ஸ்கூட்டரையும் பறிமுதல் செய்தனர்.

## கறுப்பு உடை தடை வாபஸ்

பட்டமளிப்பு விழாவில் கறுப்பு உடை அணிந்து வருவதற்கு விதிக்கப்பட்ட தடையை- சேலம் பெரியார் பல்கலைக்கழகம் திரும்பப் பெற்றுள்ளது.

பெரியார் பல்கலைக்கழகத்தின் 21ஆவது பட்டமளிப்பு விழா புதன்கிழமை (28) நடைபெற்றது. ஆளுநர் ஆர்.என்.ரவி, துணை வேந்தர் ஆகியோர் பங்கேற்று மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார். பல்கலைக்கழகத்தின் பதிவாளர் தங்கவேல் திங்களன்று (26) சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி இருந்தார்.

அதில், பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக அழைக்கப்பட்டுள்ள அனைவரும் கறுப்பு நிறம் அல்லாத உடைகளை அணிந்து வருவதை உறுதி செய்யுமாறும், அலைபேசிகள் எடுத்து வருவதைத் தவிர்க்க வேண்டுமெனவும் சேலம் மாவட்டக் காவல்துறையினரின் அறிவுறுத்தலின்படி கேட்டுக்கொள்ளப்படுவதாக தெரிவித்திருந்தார்.

போபால்:

## மோடிக்கு காணி கொடுக்க முயன்ற 100 வயது மூதாட்டி





பிரதமர் நரேந்திர மோடி ஒருநாள் பயணமாக மத்திய பிரதேச தலைநகர் போபால் சென்றார். அங்கு ராணி கமலபதி ரயில் நிலையத்தில் இருந்து 5 வந்தே பாரத் ரயில் சேவைகளை அவர் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிலையில் மத்திய பிரதேசத்தை சேர்ந்த 100 வயது மூதாட்டி ஒருவர் பிரதமர் மோடியை தனது மகனாக கருதி தனக்கு சொந்தமான 6.6 ஏக்கர் நிலத்தை, அவருக்கு வழங்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

அவரது பெயர் மங்கிபாய் தன்வார். மத்தியபிரதேச மாநிலம் ராஜ்கர் மாவட்டத்தை சேர்ந்தவர். இந்த மூதாட்டிக்கு 12 மகன்கள், 2 மகள்கள் உள்ளனர். ஆனாலும் தனது பிள்ளைகளைவிட பிரதமர் மோடி மீது மிகுந்த அன்பு வைத்துள்ளார். தனது அறையிலும் பிரதமர் மோடி படத்தை மாட்டி வைத்துள்ளார்.

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

# ஸ்கொட்லாந்தை வென்ற இலங்கை

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில், புலவாயோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்கொட்லாந்து உடனான குழு பி போட்டியில் இலங்கை வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஸ்கொட்லாந்து

இலங்கை: 245/10 (49.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: பதும் நிஸங்க 75 (85), சரித் அஸலங்க 63 (65) ஓட்டங்கள். பந்துவீச்சு: கிறிஸ் கிரேவ்ஸ் 4/32, மார்க் வாட் 3/52, கிறிஸ் சோல் 2/46, அலஸ்டைர் இவான்ஸ் 1/35)

ஸ்கொட்லாந்து: 163/10 (29 ஓவ. ) (துடுப்பாட்டம்: கிறிஸ் கிரேவ்ஸ் ஆ.இ 56 (41) ஓட்டங்கள். பந்துவீச்சு: மகேஷ் தீக்‌ஷன 3/41,




வனிடு ஹஸரங்க 2/42, தசுன் ஷானக 1/0, கசுன் ராஜித 1/25, லஹிரு குமார 1/30)

போட்டியின் நாயகன்: மகேஷ் தீக்‌ஷன இதேவேளை, ஐக்கிய அரபு அமீரகத்தை அயர்லாந்து வென்றிருந்தது.

சர்வதேச கராத்தே தொடரில்

## சாதித்த சானுயாவை கௌரவிக்கும் நிகழ்வு

■ சுப்ரமணியம் பாஸ்கரன்

சர்வதேச சம்பியன் கராத்தே தொடரில் வெண்கலப் பதக்கம் வென்ற வீராங்கனை தவராசா சானுயாவை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரனால் கௌரவித்து ஊக்கப்படுத்தும் நிகழ்வானது மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது சானுயாவுக்கு றூபவதி கேதீஸ்வரன் பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார். தொடர்ந்து



உதவி மாவட்டச் செயலர் திருமதி ஈ. சத்தியஜீவிதா மாலை அணிவித்ததையடுத்து மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. சிறிமோகனன் நினைவுக் கேடயத்தை வழங்கி மதிப்பளித்திருந்தார்.

மேலும் சானுயாவை வரவேற்கும் நிகழ்வு நே கிளிநொச்சியில் இடம்பெற்றிருந்தது. இதன்போது கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் றூபவதி கேதீஸ்வரனிடம் ஆசியைப் பெற்றதுடன், தொடர்ந்து மாகாதேவா ஆச்சிரமம் முன்றலில் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

## நியூசிலாந்துப் பெண்களை வீழ்த்திய இலங்கைப் பெண்கள்

நியூசிலாந்து பெண்கள் அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இலங்கைப் பெண்கள் அணி வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் அணித்தலைவி சோபி டெவின், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

தேசிய பெண்கள் கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Sri Lanka Cricket
Dialog

மழையால் 28 ஓவர்கள் கொண்ட போட்டியாக நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 28 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், அமெலியா கெர் 40 (51), மடி கிறீன் 38 (30), சுஸி பேட்ஸ் 28 (35), ஜோர்ஜியா பிளிமர் ஆட்டமிழக்காமல் 23 (25), டெவின் 19 (14) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், சுகந்திகா குமாரி, கவிஷா டில்ஹாரி, இனோக றணவீர ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 172 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, அணித்தலைவி சாமரி அத்தப்பத்துவின் ஆட்டமிழக்காத 108 (83), விஷ்மி குணரத்னவின் 50 (74) ஓட்டங்களோடு 27 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகியாக அத்தப்பத்து தெரிவானார்.

தென்கிழக்கு–பல்கலைக்கழக வலைப்பந்தாடத் தொடரில்

## சம்பியனான வர்த்தக முகாமைத்துவ பீடம்



■ அஸ்ஹர் இப்றாஹீம்

தென்கிழக்கு பல்கலைக்கழக பீடங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுக்களில் வலைப்பந்தாட்டத் தொடரில் வர்த்தக முகாமைத்துவ பீடம் சம்பியனானது.

பல்கலைக்கழக பிரதான கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் கலை கலாசார பீடத்தை வென்றே முகாமைத்துவ பீடம் சம்பியனானது.

இத்தொடரின் மூன்றாமிடத்தை பொறியியல் பீடம் பெற்றது.



## ஜுவென்டஸுடன் ஓராண்டு ஒப்பந்த நீடிப்பில் கைச்சாத்திட்ட றபியொட்

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஜுவென்டஸுடன் ஓராண்டு ஒப்பந்த நீடிப்பொன்றை அக்கழகத்தின் மத்தியகளவீரர் அட்ரியன் றபியொட் கைச்சாத்திட்டுள்ளார்.

ஜுவென்டஸுடனான 28 வயதான றபியொட்டின் முன்னைய ஒப்பந்தமானது முடிவடைந்திருந்த நிலையில், அவரை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் இலக்கு வைப்பதாகக் கூறப்பட்டிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 29 ஜூன் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.